முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 723**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

21.09.2021, செவ்வாய்கிழமை

1. ஞானசுடரே ஆறுமுக அரங்கா
ஞான சூட்சுமமே ஓங்காரக்குடில் ராசா
வானவர்கள் இணைந்து உமக்கு வரம்தர
வள்ளலாக வாழுகின்ற குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரம்தந்து அரங்கன் உன் தர்மத்தை
வளர்க்கும் ஆறுமுகப்பெருமான் யானும்
3. யானுமே பலம் கூட்டி உன் தொண்டர்களுக்கு
உயர்வான சக்தி வழங்கி வர
ஞானயுகம் படைக்கும் மகா சேவையில் ஞானிகள் துணைகொண்டு அரங்கன் நீ
அரங்கன் நீ உலகமக்களையும் ஞானியாக்கி அவதாரத்தின் நோக்கமாக வெற்றி கொள்வாய்
4. வெற்றிகொள்ள வந்த மாதவசி நீ
வெற்றி கண்டு உலகமக்களை நோக்கி
ஆற்றல் கூட்டி அவரவர்க்கும்
அழியாமை என்கின்ற அதீத சக்தி தந்து கலியுக மக்களுக்கும்
5. மக்களுக்கும் ஞானியாகும் வாய்ப்பு அருளி
மகா யோகியாய் மரணமில்லா பெருவாழ்வை
தேக்கமிற்றி உலகோர்க்கு தந்து தெய்வீக பலம் கூட்டும்
தேசிகனே உன் சக்திக்குள் யானிருக்க
6. இருக்கவே உன் நோக்கம் வெற்றி கொள்ளும்
இந்த உலகமே பாதுகாப்பு மிக்க
ஞான யுகமாக மாற்றம் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–